# யூன் – 17 - சனி

## புனித கிரகோரி பார்பரிகோ

**என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் முழு உளமே! ஆவரது திருப்பெயரை ஏத்திடு! திபா. 103:1**

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 5 : 14 – 21

சகோதர சகோதரிகளே! கிறிஸ்துவின் பேரன்பே எங்களை ஆட்கொள்கிறது. ஏனெனில் ஒருவர் அனைவருக்காகவும் இறந்தார். அனைவரும் அவரோடு இறந்தனர். இது நமக்குத் தெரியும். வாழ்வோர் இனி தங்களுக்கென வாழாமல் தங்களுக்காக இறந்து உயிர்பெற்றெழுந்தவருக்காக வாழவேண்டும் என்பதற்காகவே அவர் அனைவருக்காகவும் இறந்தார். ஆகவே இனிமேல் நாங்கள் எவரையும் மனித முறைப்படி மதிப்பிடுவதில்லை முன்பு நாங்கள் கிறிஸ்துவையும் மனித முறைப்படிதான் மதிப்பிட்டோம். ஆனால் இப்போது அவ்வாறு செய்வதில்லை. எனவே ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார். பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ! இவை யாவும் கடவுளின் செயலே. அவரே கிறிஸ்துவின் வாயிலாக நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார் ஒப்புரவாக்கும் திருப்பணியையும் நமக்குத் தந்துள்ளார். உலகினரின் குற்றங்களைப் பொருட்படுத்தாமல் கடவுள் கிறிஸ்துவின் வாயிலாக அவர்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். அந்த ஒப்புரவுச் செய்தியை எங்களிடம் ஒப்படைத்தார். எனவே நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய் இருக்கிறோம். கடவுளே எங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுக்கிறார். ஆகவே கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம். நாம் கிறிஸ்து வழியாகத் தமக்கு ஏற்புடையவராகுமாறு கடவுள் பாவம் அறியாத அவரைப் பாவ நிலை ஏற்கச் செய்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்

## நற்செய்தி : மத்தேயு 5 : 33 – 37

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: மேலும், ”பொய்யாணை இடாதீர். ஆணையிட்டு நேர்ந்து கொண்டதை ஆண்டவருக்குச் செலுத்துவீர்” என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் ஆணையிடவே வேண்டாம். விண்ணுலகின் மேலும் ஆணையிட வேண்டாம் ஏனென்றால் அது கடவுளின் அரியணை. மண்ணுலகின் மேலும் வேண்டாம் ஏனெனில் அது அவரின் கால்மணை. எருசலேம் மேலும் வேண்டாம் ஏனெனில் அது பேரரசரின் நகரம். உங்கள் தலைமுடியின் மேலும் ஆணையிட வேண்டாம் ஏனெனில் உங்கள் தலைமுடி ஒன்றையேனும் வெள்ளையாக்கவோ கறுப்பாக்கவோ உங்களால் இயலாது. ஆகவே நீங்கள் பேசும்போது “ஆம்“ என்றால் “ஆம்“ எனவும் “இல்லை“ என்றால் “இல்லை“ எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடத்திலிருந்து வருகிறது’’ என்றார்.

**தியானம்:** கிறஸ்தவ விசுவாசத்தின் முக்கியமாக அடிப்படையான உண்மை இயேசுக்கிறிஸ்து கடவுளால் அனுப்பப்பெற்று மனுக்குலத்தை பாவத்திலிருந்து மீட்டுக்கொண்டார் என்பதேயாகும். ஆகவே பாவத்திலிருந்து மீட்பு பெற்ற நாம் கடவுளோடு ஒப்புரவாக வேண்டும் என்பதே இறைவனின் விருப்பமாகும். ஆகவே பழையன கழிந்து புதியன புகுந்த நாம் பாவம் என்ற சதுப்பு நிலத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமென இன்றைய முதல் வாசகம் கூறுகின்றது. உலகில் மக்கள் ஒரு திசையிலிருந்து மறுதிசைக்கு ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். செல்வம், புகழ் அவர்களைத் தேடி வருகின்றது. ஆனால் அவர்கள் கண்ட பலன் என்ன என்பது கேள்விக்குறியே? உங்கள் தலைமுடி ஒன்றையேனும் கறுப்பாக்கவோ, வெள்ளையாக்கவோ உங்களால் முடியாது. உங்களை ஆள்பவனும் ஆட்டுவிப்பவனும் இறைவன் ஒருவரே. எனவே இறைவனைக் கொண்டு ஆணையிட வேண்டாம் என இன்றைய இரண்டாம் வாசகம் கூறி நிற்கின்றது. எனவே ஆண்டவரைத் தேடுங்கள், அவரைக் கூவியழையுங்கள், தீய எண்ணங்களையும் தீமையான செயல்களையும் விட்டு விட்டு, கடவுளுடைய வழிகளைப் பின்பற்ற ஆண்டவர் எமக்கு அழைப்பு விடுக்கின்றார். கடவுளுடைய வழிகள் மனிதருடைய வழிகள் அல்ல. எவ்வாறு மண்ணிலிருந்து விண்ணகம் உயர்ந்து நிற்கின்றதோ அவ்வாறே கடவுளின் செயல்களும் உயர்ந்து நிற்கின்றது. எனவே கடவுளோடு எம் வாழ்வை ஒப்புரவாக்க, எம்வாழ்வை மாற்றி அமைக்க இறைவனிடம் வரம் வேண்டுவோம்.